# திகைக்கவைக்கும் 'தேசப் பொக்கிஷம்'

**இன்று நாம் இந்தியாவில் பயன்படுத்தும் எல்லா ரூபாய் நோட்டுகளிலும் காந்திஜி இடம் பிடித்து சிரித்துக் கொண்டிருக்கிறார். பணத்தை செலவழிக்கும் வேகத்தில் அதை நாம் ரசித்துப் பார்ப்பதில்லை என்றாலும் அதன் பின்னால் பெரும் சரித்திரம் இருக்கிறது.**

**1969**–ம் ஆண்டு காந்திஜியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது முதல் முறையாக அவரது முழு உருவம் கொண்ட 1, 2, 5, 10, 100 ரூபாய் நோட்டுகளை இந்திய அரசு வெளியிட்டு, தேசத் தந்தையை கவுரவப்படுத்தியது. அவை அனைத்தும் நினைவு நோட்டுகளாக காந்திஜியை பெருமைப்படுத்தும் விதத்தில் குறைந்த எண்ணிக்கையிலே வெளியிடப்பட்டன. அவைகளில் காந்திஜி சபர்மதி ஆசிரமத்தில் தியானம் செய்வது போன்ற படம் இடம் பெற்றுள்ளது.

இங்கு இடம் பெற்றிருக்கும் ரூபாய் நோட்டுகளில் குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று இருக்கிறது. நோட்டுகளின் எண் '021069' என்றிருக்கிறது. இது காந்திஜி பிறந்த தினமான '02 10 69' என்பதை குறிக்கும் விதத்தில் சேகரிக்கப்பட்டதாகும். இந்த எண்கள் பத்து லட்சம் நோட்டுகளில் ஒன்றில்தான் வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (காந்திஜி பிறந்தது 1869–ம் ஆண்டு.)







காந்தியின் பிறந்த தினத்தை (02.10.69) குறிக்கும் வரிசை எண் கொண்ட 1000 ரூபாய் மற்றும் 100 ரூபாய் நோட்டுகள்.

**கா**ந்திஜி இடம் பெற்றிருக்கும் நமது கரன்சிகளில் பிரெய்லி அம்சமும் உள்ளது. கண்தெரியாதவர்களும் அதை தொட்டு உணர்ந்து, அது எத்தனை ரூபாய் நோட்டு என்று கண்டறிந்து விடலாம்.






'கியார்க் மூர்த்தி' சிலையும், அச்சிலையின் படம் பொறிக்கப்பட்ட 500 ரூபாய் தாளும்.

**உ**ங்கள் பாக்கெட்டில் இருக்கும் 500 ரூபாய் நோட்டை எடுத்து, அதன் பின்புறத்தை பாருங்கள். கம்பு ஊன்றிய காந்திஜி சிலருடன் நடந்து செல்வது போன்ற காட்சி அதில் இடம் பெற்றிருக்கும். அது வரைந்த படமோ, போட்டோவோ அல்ல, சிலை! அந்த சிலை டெல்லியில் உள்ளது. 1930–ம் ஆண்டு உப்புக்கு விதிக்கப்பட்ட வரிக்கு எதிராக காந்திஜி தாண்டி யாத்திரை செய்ததை நினைவுபடுத்தும் விதத்தில் அந்த சிலை வடிவமைக்கப்பட்டது. காந்திஜியுடன் பத்து நபர்கள் இடம்பெற்றிருக்கும் அந்த பிரமாண்ட சிலையை பிரபல சிற்பி தேவி பிரசாத் ராய் சவுத்ரி வடிவமைத்துள்ளார். இந்த சிலையை மக்கள் 'கியார்க் மூர்த்தி' சிலை என்று அழைக்கிறார்கள். இந்த சிலையை சுற்றி பெரிய பூங்கா உள்ளது. சிலையின் அருகில் ராணுவவீரர் ஒருவர் தினமும் காவல் பணியில் ஈடுபடுகிறார்.

இனி உழைப்பின் ஊதியமாய் உங்கள் கைக்கு 500 ரூபாய் வரும்போது, மறக்காமல் திருப்பிப்பார்த்து காந்திஜிக்கு ஒருமுறை அஞ்சலி செலுத்திக்கொள்ளுங்கள்.

**ந**ம் கையில் இருக்கும் எல்லா இந்திய கரன்சி நோட்டுகளின் முன் பகுதியிலும் சிரித்தபடி காந்திஜி இடம் பெற்றிருக்கிறார். அந்த சிரிப்புக்கு பின்னாலும் ஒரு சிறப்பு உண்டு.

1946–ம் ஆண்டு காந்திஜியை வில்லியம் பிரடெரிக் பெதிக் லாரன்ஸ் என்பவர் சந்தித்தார். அவர் இந்தியா மற்றும் பர்மாவிற்கு, இங்கிலாந்தின் செயலாளராக பணிபுரிந்தவர். காந்திஜியும், அவரும் சந்தித்தபோது காந்திஜியிடம் இருந்து அற்புதமான புன்னகை வெளிப்பட்டது. அதை போட்டோகிராபர் 'கிளிக்' செய்துவிட்டார். அதுதான் முதல் படம். இரண்டாவது படம் அப்படியே அதை 'ரிவர்ஸ்' செய்தது. ரிவர்ஸ் செய்யப்பட்ட படத்தில் இருந்து காந்திஜியின் புன்னகை காட்சியை மட்டும் 'குளோசப்' செய்து, வெட்டி எடுத்து கரன்சி நோட்டின் முன்பகுதியில் பிரிண்ட் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த விஷயத்தை நான் கண்டுபிடித்து தெரிவித்தது விக்கிபீடியாவிலும், பிரபல இதழ்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.




1. வில்லியம் பிரடெரிக் பெதிக் லாரன்ஸுடன் காந்திஜி நிற்கும் படம்.
2. அப்படத்தின் கண்ணாடி பிம்பம்.
3,4,5. இரண்டாம் படத்தில் உள்ள காந்திஜியின் உருவப்படம் தான் வெட்டி எடுக்கப்பட்டு ரூபாய் நோட்டுகளில் பயன்படுத்தப்படுகிறது.



ஒரு கையெழுத்துக்கு 5 ரூபாய் வசூலித்து, 11 மொழிகளில் காந்திஜி போட்ட கையெழுத்து.

**கா**ந்திஜிக்கு தன் கையெழுத்து நன்றாக இல்லை என்ற வருத்தம் உண்டு. அதை தனது சுயசரிதையில் பதிவு செய்திருக்கிறார். அவர் தலித் மக்கள் நலனுக்காக நிதி சேர்ப்பதில் அதிக அக்கறை கொண்டவர். அதற்காக தன் கையெழுத்தை பயன்படுத்திக்கொண்டார். யார் கேட்டாலும் தனது கையெழுத்தை போட்டுக்கொடுத்துவிட்டு, ஒரு கையெழுத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் பெற்று நிதியில் சேர்த்துக் கொள்வார்.

ஒருமுறை காந்திஜி, சுமதி மொரார்ஜி என்ற கப்பல் கம்பெனி அதிபரின் வீட்டில் தங்கியிருந்தார். அப்போது சுமதி, காந்திஜியிடம் கையெழுத்து கேட்டார். அவரும் 'ஒரு கையெழுத்துக்கு ஐந்து ரூபாய் வீதம் தாருங்கள்' என்று கூறிவிட்டு, எம்.கே.காந்தி என்று மளமளவென 11 மொழிகளில் கையெழுத்துபோட்டு நீட்டினார். (அந்த கையெழுத்துப்படம் அருகில் உள்ளது) அதைப்பார்த்த அந்த பெண்மணி, 'இத்தனை மொழிகளில் உங்களுக்கு கையெழுத்து போடத்தெரியுமா?' என்று மலைத்துப்போனார். அதில் காந்திஜி போட்ட தமிழ் கையெழுத்தும் இடம் பெற்றிருப்பதை படத்தில் காணுங்கள். காந்திஜி தமிழிலே பாரதியாருக்கு கடிதமும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று காந்திஜி, 'தன் கையெழுத்து சரியில்லையே' என்று வருத்தப்பட்டார். அந்த கையெழுத்து இன்று யார் கையிலாவது இருந்தால் அதன் மதிப்பு சில லட்சம்! அவர் சரியில்லையே என்று வருத்தப்பட்ட கையெழுத்துக்கு காலம் இன்று எவ்வளவு மதிப்பு கொடுக்கிறது பார்த்தீர்களா!!



(இடம் பெற்றிருக்கும் அபூர்வ ரூபாய் நோட்டுகளையும், தகவல்களையும் சேகரித்தவர்: கும்மிடிப்பூண்டி எம்.எல்.ராஜேஷ்.)

– அடுத்த வாரம் நிறைவடையும்.

C
M
Y
K